Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# அரிய தாளங்களில் அமைந்த அரிய வர்ணங்கள்

**முனைவர் சு. விஜய்ராகவன்**
**வயலின் விரிவுரையாளர், (Spl.Grade)**
**தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி**
**சென்னை - 600 028**
**violin.vijayraghavan68@gmail.com**

3

**ஆய்வுச் சுருக்கம் :**

செவ்விசையில் இசை வடிவங்கள் இரண்டு பாகங்களாக கையாளப்படுகிறது. 1. கல்பித சங்கீதம் 2. மனோதர்ம சங்கீதம் ஆகும். கல்பித சங்கீதமானது அடிப்படைப் பாடங்களான சரளி வரிசைகள் முதல் வர்ணம், கீர்த்தனை, கிருதி போன்ற பல வடிவங்கள் உள்ளன. எந்தவொரு இசைக் கற்பவரும் அதிக அளவில்- வர்ணங்களை கற்றிருந்தால் அவருடைய இசை அறிவு அரங்கத்தில் தெரிய வரும். ஏனெனில் வர்ணம் என்பது பலவித நுட்பமான செயல்பாடுகளை கொண்டுள்ளது. இதனால் ராக பாவம், தாள பாவம், தான பாவம் ஸாஹித்ய பாவம் ஆகியவை புலப்படுகிறது. பல அரிய தாளங்களில் பல இசை மேதைகளால் இயற்றப்பட்ட வர்ணங்கள் இசை உலகில் வலம் வருகின்றன. இதனால் அரிய தாளங்கள் பற்றி அறிவதற்கு பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** இசை வடிவங்கள், கல்பித சங்கீதம், மனோதர்ம சங்கீதம், வர்ணங்கள், அரிய தாளங்கள், ராக பாவம், தாள பாவம், ஸாஹித்ய பாவம்

**முன்னுரை**

வர்ணம் - பெயர் காரணம்

வர்ணம் என்பது ஒரு சமூகத்தை சார்ந்த நால்வகை வருணத்தாரை ஒரு நிகழ்வில் வருவித்து மொழிவது இதற்கு சான்று, சிலப்பதிகாரத்தில் “கடலாடு காதையில்” மாதவி செய்த நிகழ்வில் முதலில் நிலா பாடி பின் நால்வகை பூதம் பாடி என குறிப்பிடப்படுகிறது. எனவே “வர்ணம்” என்பது தொடக்க காலத்தில் ஒரு சமூக மேம்பாட்டிற்காக செய்யும் அந்தண, அரச, வாணிக, வேளாளர்கள் போன்றோரைப் புகழ்ந்து பாடுவதாகததான் இருந்தது. மேலும், ஒரு சான்றாக நால்வகை வர்ண பூதத்துச் செயற்பாடுகளை நிகழ்வில் நடத்துவதற்கு சிலம்பில் நூற்பாவசக விளக்கியுள்ளது. பின்னாளில் வர்ணம், நிறங்கள் என்பவை இடைப்பிறலாய் வந்து இருக்கவேண்டும்.

**வர்ணத்தின் தோற்றம் :**

முற்காலத்தில் செவ்விசை உருப்படிகள் விருத்தங்களாகவும் அங்கங்கள் (பல்லவி, அனுபல்லவி, சரணம்) போன்றவைகள் இல்லாமலும் இசைக்கப்பட்டு வந்தது. 14ஆம் நூற்றாண்டில் திரு. அன்னமாசாரியார் அவர்களின் காலத்திற்கு பின்பு மேற்கண்ட அங்கங்கள் தோன்றலாயின. மேலும் பல தமிழ் இசைவாணர்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற அங்கங்களைக் கொண்டு பல உருப்படிகளை இயற்றினர். 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திரு. கோவிந்தசாமி ஐயா என்பவர்

முதன்முதலாக வர்ணங்களை இயற்றியதக இசை உலகில் கூறப்படுகிறது.

(உ-ம்) தூயர் ஜாசுஷிரோ - வராளி ராகம் - ஆதி தாளம்

அவரைத் தொடர்ந்து வீணை குப்பய்யர், தஞ்சை நால்வர், மானம்புசாவடி வெங்கடசுப்பய்யர், வீணை சேஷண்ணா, திருவொற்றியூர் தியாகய்யர், தஞ்சை நால்வர் முத்தையா பாகவதர், சுப்பராம தீட்சிதர், மைசூர் வாசுதேவாச்சார் சுவாதித் திருநாள், பட்டணம் சுப்ரமணிய அய்யர், பச்சிமிரியம் ஆதியப்பையர், M. பாலமுரளி கிருஷ்ணா, லால்குடி ஜெயராமன், எம்.டி. ராமநாதன் போன்ற பல இசை மேதைகள் வர்ணங்களை இயற்றியுள்ளனர்.

வர்ணம் என்பது செவ்விசை நிகழ்ச்சியில் தொடக்க நிகழ்வாகவும், பரதநாட்டியத்தில் முதன்மை பகுதி (இனுணtனூனு கடினுஞினு) ஆகவும் இருந்து வரு-கி-றது. இராகமாலிகா வர்ணம், சௌக்க வர்ணம் ஆகியவற்றின் தொடக்கத்தில் 3 சாலங்களில் (விளம்பம், திஸ்ரநடை, மத்தியமம்) இசைக்கப்பட்டு கையாண்டு வருகின்றனர். அனைத்து வர்ணங்களையும் 5 வகையான ஜாதிகளிலும் (திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம்) இசைக்கப்படுவதுண்டு.

(உ-ம்) சதுஸ்ர நடையில் ஆதி தாளத்தில் அமைந்த வர்ணத்தின் பூர்வாங்க பகுதியான பல்லவி, அனுபல்லவி, முக்தாயி ஸ்வரம் ஆகியவற்றின் மொத்த ஆவர்த்தனம் 6 ஆக இருக்கும் பொழுது கண்ட நடையில் இசைக்கும் பொழுது 10 ஆவர்த்தனமா-க தேவைப்படும். அப்பொழுது பல்லவி 2 அனுபல்லவி

2 ஆவர்த்தனங்களை இரு முறை இசைத்து பின்னர் முக்தாயி ஸ்வரத்தினை முழுதும் ஒரு முறை இசைக்கும்பொழுது (4+4+2=10) 10 ஆவர்த்-த-ன-மன மா-றும்-போ-து கண்ட நடையில் இசைக்க இயலும்.

இதுபோன்றே அனைத்து ஜாதிகளையும் அதன் அளவினை கணக்கிட்டு இசைக்க இயலும்.

வர்ணத்தின் வகைகள்

1. தான வர்ணம்
2. பத வர்ணம்
3. தரு வர்ணம்
4. இராகமாலிகா வர்ணம்
5. சௌக்க வர்ணம்

தான வர்ணம் :

பெயர் காரணம் :

ஒரு கடவுளை வேண்டி (அ) விரும்பி எழுதக்கூடிய உருப்படி தான வர்ணம் ஆகும்.

செவ்விசையில் தான வர்ணமானது மிகவும் இன்றியமையாதது. தான வர்ணத்தினை செவ்விசையில் தொடக்க உருப்படியாக கையாளுவது மரபு. மூன்று காலங்கள் தான வர்ணத்தினை இசைக்கும் பொழுது குரலிசையாளர்களுக்கு குரல் வளம் நன்றாக அமையவும், இசைக் கருவிகளை இசைப்போர்க்கு விரல்கள் நன்றாக அமையும் அளவில் மட்டுமின்றி நிகழ்ச்சியினை தொய்வின்றி

நடத்தி செல்ல வழி வகுக்கிறது. தான வர்ணத்தில் மொத்தம் ஐந்து பாகங்களாக அமைந்துள்ளது. அதாவது 1. பல்லவி 2. அனுபல்லவி, 3. முக்தாயிஸ்வரம், 4. சரணம் 5. சிட்டை ஸ்வரம் ஆகியவை ஆகும். இதில் பல்லவி, அனுபல்லவி, சரணப் பகுதிகளுக்கு மட்டுமே பாடல் வரிகள் (சாஹித்யம்) இருக்கும். செவ்விசையில் இத்தான வர்ணத்திற்கு பல்லவி (அ) சரணத்தில் கற்பனை ஸ்வரங்கள் இசைப்பதும் ஒரு மரபு ஆகும். மேலும் சில தான வர்-ணங்-க-ளில் ஐந்து ஜா-தி-களை கொண்ட சிட்-டை ஸ்வரங்-க-ளும் அமைந்-தி-ருக்-கும்.

(உ--ம்) பாராயோஸ்ரீவள்ளி - சுமனேசரஞ்சனி - ஆதிதாளம் - தருமபுரம் திரு. கோவிந்தராஜன் இந்த வர்ணத்தில் சிட்டை ஸ்வரத்தில் ஐந்து ஜதிகளைக் கொண்டு இயற்றியுள்ளார்.

தான வர்-ணம்

(உ--ம்) 1. ஸாமி நின்னே - பந்துவராளி - ஆதிதாளம் - ஷட்கால நரசய்யா

2. ஸாமினி ரம்மன - ஆனந்த பைரவி - கண்டஜாதி அடதாளம் - ஸ்ரீஸ்யாமா சாஸ்திரி

பத வர்ணம் :

பெயர்க் காரணம் - சிருங்கார ரஸத்தினை வெளிப்படுத்த கூடிய நாயகன், நாயகி உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைவது பதவர்ணம்.

செவ்விசையிலும், நாட்டிய நிகழ்ச்சிகளிலும் பத வர்ணத்திற்கு ஒரு முக்கிய இடமுண்டு. இதில் 1. பல்லவி 2. அனுபல்லவி 3. முக்தாயி ஸ்வரம், 4. கரணம் 5. சிட்டை ஸ்வரம் என- ஐந்து பாகங்களாக பிரிக்கப்பட்டு இருக்கும். பத வர்ணம் போல் அல்லாமல் பல்லவி, அனுபல்லவி, முக்தாயி ஸ்வரம், சரணம், சிட்டை ஸ்வரங்கள் என அனைத்து பாகங்களுக்கும் பாடல் வரிகள் (ஸாஹித்யம்) இயற்றப்பட்டு இருக்கும். பொதுவாக தான வர்ணமானது தொடக்க பகுதியில் (பூர்வாங்கம்) விளம்ப காலமாகவும் சரணம், சிட்டை ஸ்வரங்கள் பகுதிகளை மத்யம காலமாகவும் இசைக்கப்படுவதுண்டு.

(உ-ம்) 1. ஸ்வாமி நீ மனமிரங்கி - ஸ்ரீரஞ்சனி ஆதிதாளம் - பாவநாசம் சிவன்

2. தேவர் முனி-வர் தொ-ழும் - சண்-முக ப்ரி-யா - ஆதி தாளம் - லால்-குடி ஜெய-ரா-மன்

தருவர்ணம்

பெயர்க் காரணம் - ஒரு நாடக வடிவில் உள்ள ஒரு கதையினை விவரித்து இயற்றுவது தருவர்ணம் ஆகும்.

தருவர்ணமானது செவ்விசையிலும், நாட்டிய நிகழ்ச்சிகளிலும் இசைக்கப்படுவது. இதில் உள்ள ஐந்து பாகங்களுக்கும் பத வர்ணம் போல பாடல் வரிகள் அமைந்திருக்கும்.

(உ-ம்) மாதே - கமாஸ் - ஆதிதாளம் - முத்தைய்யா பாகவதர்

வர்ணங்களில் கையாளப்பட்ட அரிய தாளங்கள் :

பொதுவாக பதவர்ணம், தானவர்ணம், தருவர்ணம், இராகமாலிகா வர்ணங்களில் ‘சதுஸ்ரதிரிபுடை” என அழைக்கக்கூடிய ஆதி தாளம் கையாளப்பட்டுள்ளது. மேலும் அடதாள வர்ணங்களுக்கு கண்ட ஜாதி அடதாளம் கையாளப்பட்டுள்ளது. இதனுடைய பரிணாம வளர்ச்சியில் அரிய தாளங்களான திஸ்ர அட, கண்ட துருவ, சதுஸ்ர அட, மிஸ்ர ஜம்பை திஸ்ர மட்ய, மிஸ்ரசாப்பு, மிஸ்ரரூபகம்,

திஸ்ரஏக, ஆதி-திஸ்ரகதி மிஸ்ரதிருபுடை, சங்கீர்ண மட்ய, ரூபக தாளங்களில் பல இசைவாணர்கள் வர்ணங்களை இயற்றியுள்ளனர்.

சௌக்க வர்-ணம்

பெயர்க் கா-ர-ணம் :

சௌக்-கம் என்-ப-தற்கு விளம்ப நடை-யில் இருப்-ப-தா-கும். பொ-து-வாக சௌக்க
வர்-ணங்-கள், ஆதி, கண்ட ஜாதி அட மற்-றும் ரூப-கம் தாளங்-க-ளில் அமைந்து இருக்-கும்.
பர-த நாட்-டிய நிகழ்-விற்கு இவ்-வர்-ண-மா--னது பொருத்-த-மா-க-வும் அதே-போல் இறை-வ-னை பக்-தி-யால் ச்ருங்-கார ரசத்-தில் இயற்-றப்-ப-டு-வது ஆகும்.

(உ-ம்) 1. சாமினி ரம்-ம-னவே - ஆனந்த பைரவி - ஆதி - சுப்-பு-ராம தீட்-சி-தர்

2. ர-ம-ணவே “தி-யா-க-ரா-ஜஸ்-வாமி - இந்-தோளம் - கண்ட அட - ரா-ம-சாமி தீட்-சி-தர்

இராகமாலிகா வர்ணம்

பெயர்க் காரணம் :

பொதுவாக இறைவனை புகழ்ந்தும், பரிகசித்தும் பல இராகங்களில் இயற்றப்படும் வர்ணம் இராகமாலிகா வர்ணம்.

இராகமாலிகா வர்ணங்களானது பொதுவாக செவ்விசை நிகழ்ச்சிகளில் தொடக்கத்திலும், பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் மையப் பகுதியாகவும் அமைந்திருக்கும். இராக மாலிகை வர்ணங்களில் நவராக மாலிகா, (ஒன்பது இராகங்கள்) நவகனராகமாலிகா, (கனராகங்களை கொண்டு இயற்றப்படுவது தசராகமாலிகா (பத்து இராகங்களை கொண்டு இயற்றப்படுவது), ரிஷ-பஷட் இராகமாலிகா
(ஆ-று ரா-கங்-களை கொண்டு இயற்-றப்-ப-டு-வது) என பல்வேறு இராக வகைகளை கொண்டு இன்றும் கையாளப்படுகிறது.

(உ-ம்) 1. வல-சிவச்சி - நவ-ராக மா-லி-கா - ஆதி தாளம் - பட்-ட-ணம் சுப்-ர-மண்ய அய்-யர்

2. ரிஷபஷட் ராகமாலிகா - ராகமாலிகா - ஆதி தாளம் - தருமபுரம் கோவிந்தராஜன்

(அனைத்து ராகங்களும் ரிஷப ஸ்வரங்களில் தொடங்கும்)

(கானடா, சஹானா, சாரங்கா, கௌளை, ஶ்ரீ, சுருட்டி சரஸ்வதி, மத்யமாவதி)

ஸ்வராக்ஷரங்கள் அமைந்த வர்ணங்கள்

பதவர்ணம்

(உ-ம்) ஸரகுண - தோடி - ஆதி - M. பாலமுரளிகிருஷ்ணா

இவ்வர்ணத்தில் சரணப் பகுதியில் அமைந்துள்ள ஸ்வரம் மற்றும் சாஹித்யம், தாளத்தில் அமைந்துள்ள கார்வைகள்

சர-ணம்

ஸ்வரம் நீ; கரிமக நிநீத ரிநிஸ்ŏ > நிதநிஸ்தா ஸ்ŏ > மநிகம காரிஸ >>

ஸாஹித்யம் நீ கரிமக னி நீத ரினிஜே > ரிதினிஸ் தா- ஸா > மநிகம மோதினி >>

கார்வைகள் 4 1111 1 2 1 1 12 > 111 1 2 2 > 1 1 1 1 2 1 1 >>

இதில் ஜே, ரிதி, மோதினி போன்ற வார்த்தைகளை தவிர்த்து மற்ற வார்த்தைகள் அனைத்தும் ஸ்வராக்ஷரமாக அமைந்துள்ளது. மேலும் எத்துகடை முதல் பகுதியில்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்வரம் கா;; | மா; மா தா தா > | மா நீ கா தா > | ; தா, ரீ, >> | |
| ஸாஹித்யம் | கா | ம ம த த > | ம னி க த > | ; த ரீ >> |
| கார்வைகள் | 6+4+2+2+2 > | 2+2+2+2 > | 2+3+3 >> | |

ஆக 32 மாத்திரைகளாக ஒலிப்பது இதன் சிறப்பு அம்சம் ஆகும். இது போன்று இயற்றுவதற்கு இசையின் ஸ்வர ஞானமும், ஸாஹித்ய ஞானமும் மிகுந்த அளவில் இருந்தால் தான் இவ்வாறாக இயற்ற இயலும்.

தற்-பொ-ழுது இசை நிகழ்-வு-க-ளில் அதி-க-மாக கையாளப்-ப-டும் கண்ட ஜாதி அட-தாள வர்-ணத்-தினை பற்-றிய விப-ரம் :

இத்தாளமானது 1100 என்கிற 2 லகு, த்ருதம் ஆகிய அங்கங்களை கொண்டு 14 அட்சரங்களாக உள்ளது. பொதுவாக அனைத்து வர்ணங்களிலும் பூர்வாங்க பகுதி முடிந்து உத்தராங்க பகுதி தொடங்கும் இடம் “அருதி'' என அழைக்கப்படுவது உண்டு. கண்ட ஜாதி திரிபுடை தாளத்தில் 2 இடங்களில் அருதி வருகிறது. முதல் லகுவில் 5 அட்சரம் முடிந்தபின்பு 1வது அருதியும் இரண்டாவது லகுவில் 2வது அருதியும் வருவதால் அதற்கேற்றால் போல் ஸாஹித்யம் அமைந்திருக்கும். ஆகையால் ஸாஹித்யத்தின் முக்கியத்துவம் மற்றும் அருதியினை கணக்கில் கொண்டு கண்ட ஜாதி அடதாளத்தில் சமத்திலிருந்து 2 அட்சரங்கள் தள்ளி வர்ணத்தின் ஸாஹித்யம் அமைவது வழக்கம். ஏனெனில் “அருதி”யினை கணக்கிட்டு 2 முறை வரவேண்டியிருப்பதால் கண்ட ஜாதி அடதாள வர்ணங்கள் இவ்வாறு அமைந்து இருக்கும்.

உதாரணமாக, கூரை நாடு திரு. நடேசபிள்ளை அவர்கள் இயற்றிய ஹம்ஸத்வனி ராக கண்டஜாதி அடதாள வர்ணத்தில் 2 அட்சரம் தள்ளி பல்லவி முதல் அடியில் ஆனை மாமுகமாமுகனே என்கிற வர்ணத்தில் ஆனை...(ஐ - முதல் அருதி), (மு-இரண்டாம் அருதி) என வருகிறது. இதுவே கண்ட ஜாதி அடதாளத்தில் அமைந்துள்ள வர்ணங்களின் அமைப்பு ஆகும். மேலும் முக்தாயி ஸ்வரமும் 2 அட்சரங்கள் தள்ளியும் சரண சாஹித்யங்கள் 2 அட்சரங்கள் தள்ளியும், சிட்டை ஸ்வரங்கள் தாளத்தின் சமத்தில் ஆரம்பித்து 2 அட்சரம் தள்ளி மீண்டும் சரணத்தினை இசைக்கவும் அமைக்கப் பட்டிருக்கும். இதுபோன்றே அனைத்து கண்ட ஜாதி அடதாள வர்ணங்கள் இயற்றப் படுகிறது.

(உ-ம்) 1. விரிபோணி - பைரவி - கண்டஜாதி அடதாளம் - பச்சிமிரியம் ஆதியப்பையர்

2. சரஜிநாப - காம்போதி - கண்டஜாதி அடதாளம் - ஸ்வாதி திரு-நாள்

அரிய தாளங்களில் உள்ள வர்ணங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தய ஜீட (தெலுங்கு) | ஸ்ரீராகம் | திஸ்ர அட | கடலூர் திரு. சுப்ரமணியம் |
| 2. | கானலோலுடை (தெலுங்கு) | தோடி | கண்டதுருவ | வீணை சேஷண்ணா |
| 3. | இந்த சலமு (தெலுங்கு) | சுருட்டி | சதுஸ்ரஅட | தஞ்சை பொன்னைய்யா பிள்ளை |
| 4. | கமலாஷி | மணிரங்கு | மிஸ்ரஜம்ப | டைகர்வரதாச்சாரி |

5. கோபம் கொள்வதேனோ (தமிழ்) தோடி திஸ்ரஏகம் தஞ்சை பொன்னையா பிள்ளை

6. பாலயமாம் தேவ (சமஸ்கிருதம்) பூர்ணசந்திரிகா ஆதி திஸ்ரவதி சுவாதி திருநாள்

7. நீவே காத்யாயினி (தெலுங்கு) கல்யாணி திஸ்ர மட்யம் ஸ்ரீச்யாமா சாஸ்திரி

8. சாராஷ்ரே ஈவேள (தெலுங்கு) நாட்டைகுறிச்சிமிஸ்ரசாப்பு தஞ்சை பொன்னையா பிள்ளை

9. ஸாராக்ஷி (தெலுங்கு) பூர்விகல்யாணி மிஸ்ரரூபகம் தஞ்சைபொன்னையா பிள்ளை

10. காமகோடி (தெலுங்கு) ராகமாலிகா மிஸ்ரதிரிபுடை வீணை சேஷண்ணா

11. மஹிஷாசுரமர்த்தினி (தெலுங்கு) ராகமாலிகா சங்கீர்ண மட்டம் வீணைசேஷண்ணா

12. சாமிகிசரிஎவ்வரே (தெலுங்கு) வசந்தா ரூபகம் பாலுஸ்வாமி தீட்சிதர்

தாள அமைப்பு

| எண். | -தாளத்-தின் பெயர் | -அங்-கம் | -அட்-ச-ரங்-கள் |
|---|---|---|---|
| 1. | திஸ்ர அட | 13 13 02 02 | 10 |
| 2. | கண்ட துருவம் | 15 02 15 15 | 17 |
| 3. | சதுஸ்ர அட | 14 14 02 02 | 12 |
| 4. | மிஸ்ரஜம்ப | 17 01 22 | 10 |
| 5. | திஸ்ரஏகம் | 13 | 3 |
| 6. | ஆதி திஸ்ரகதி | 14 02 02 6 மாத்-தி-ரை-கள் | 8அட்சரத்திற்-கு - 48 மாத்-தி-ரை-கள் |
| 7. | திஸ்ரமட்யம் | 13 02 13 | 8 |
| 8. | மிஸ்ரசாபு | அங்கம் இல்லை | 3 லீ |
| 9. | மிஸ்ரரூபகம் | 02 17 | 9 |
| 10. | மிஸ்ரதிரிபுடை | 17 02 02 | 11 |
| 11. | சங்கீர்ண மட்யம் | 19 02 19 | 20 |
| 12. | ரூபக சாப்-பு | -அங்-கம் இல்-லை | 3 |

**முடிவுரை**

மேற்கண்ட அரிய தாளங்கள் வர்ணங்கள் பல அமைந்திருப்பது இசை மேதைகளுக்கும் இசை கற்பவர்க்கும், ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இன்றியமையாத உருப்படியாக விளங்-கு-கி-ற-து. இதுபோன்ற பல அரிய தாள வர்ணங்களை கற்பதின் பலனாக தாளங்களின அம்சங்களான எடுப்பு, அட்சரங்கள், காலபிரமாணம், தான வகைகள் மேலும் மனோதர்மம் என்று அழைக்கக்கூடிய (இஹூனுச்tடிதிடிtதூ) தன்னால் தன் கற்பனை வளத்தின் வாயிலாக பல இராகங்களையும், தாளங்களையும் அதன் கண் நோக்கின் உள்ள சாராம்சங்களையும் அறிவதற்கு ஏதுவாகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. சூர்ய காந்தி,முதற்பதிப்பு,1997 விபஞ்சி ட்ரஸ்ட் பி.எஸ்.ஆர். பிரிண்டர்ஸ், சென்னை
2. வர்ண சாகரம் முதற்பதிப்பு 2006 திரு. டி.கே.கோவிந்தராவ் ஐகுஆ N-0-965-1871-5-2- கானமந்திர் பப்ளிகேஷன்ஸ், சென்னை
3. கர்னாடக ஸங்கீதம் முதற்பதிப்பு 2004 கல்லிடைக்குறிச்சி அ.ஸுந்தராமய்யர்,கு.வெங்கடேசன்
4. கீதஸீந்தரம் முதற்பதிப்பு 2007 டாக்டர் பி.எம். சுந்தரம் பி.வி. பிரிண்டர்ஸ், சென்னை
5. தானவர்ணதரங்கிணி முதற்பகுதி,டாக்டர் பி.எம். சுந்தரம் ராஜலக்ஷ்மி அறக்கட்டளை, கோவை